**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 5, Issue - 1, November 2025** **E-ISSN: 2583-0481**

# Philosophy of the Five Elements and Worship in *Thiruvasagam*

**N. Saravanan,** Tamil Research Scholar, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0008-3264-0586**
**Dr. S. Maheswari,** Assistant Professor of Tamil, Faculty of Humanities and Science,
Meenakshi Academy of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280**
**DOI: 10.5281/zenodo.18866455**
**Received:** 17 August 2025, **Revised:** 15 September 2025, **Accepted:** 10 October 2025, **Available online:** 26 November 2025.

## Abstract

*As we inquire to understand the origin of the universe, it is understood that the force that moves the cosmos, the divine, is within the five primordial substances (pancha Bhootas) enclosed in the sacred chant "Namashivaya" that governs the world. It is also realised that the divine itself is active within these elements. By illustrating this from the Thiruvasagam, Manikavasagar points out to humans how to attain the divine nature. It is essential to recognise and worship the Pancha Bhootas to attain them. Besides, it elicited that all the places associated with the presence of the pancha bhoothas are significant, and without the pancha bhoothas, there would be no world. By emphasising the importance of the pancha Bhoothas for a healthy and complete human life, various forms of worship and rituals are also prescribed.*

**Keywords:** Philosophy, Five Elements, Worship, Manikavasagar, *Thiruvasagam*.

## References

[1] Anbalagan, Ko. *Kadavul Ariviyal.* Iraiyarul Manram, Hosur, Velur, 2009.
[2] Anantarasan, Aa. *Sivajnana Potam Valittunai* Vi. U. Narmata Patippakam, Chennai 17, 2011.
[3] Ramaiya, Pu. A. *Senthamizh Sorpirappiyal Perakaramutali.* Senthamizh Sorpirappiyal Akaramutalit Titta Iyakka Veliyitu, Chennai 2004.
[4] Ramanatha Pillai, Pa. *Tirumantiram.* Tirunelveli Tennintiya Saivasiddhanta Nurpatippuk Kazhagam Limited Patippu – 1942.
[5] Rasamanikkanar, Va. *Sittar Ilakkiyam.* Tamilp Palkalaik Kazhagam, Tanjavur, 2004.
[6] Kandhasamippillai, Ni. *Tiruvasagam* (Mulam*).* Annamalai Palkalaik Kazhaga Nool Veliyeedu, 1964.
[7] Sundara Manikka Yogisvarar, I. Pa. Aa. *Auvai Kural.* Alaku Patippakam, Rajaji Nagar, Villivakkam, Chennai, 1915.
[8] Teyvasikamani Kavuntar, Ve. Ra. Pa. Aa. *Arivanar Pancamarapu Moolamum Uraiyum.* Erodu, 1975.
[9] Devasenatipati, Va. Aa. *Saivasiddhantattin Atippataikal.* Chennai Palkalaik Kazhaga Veliyeedu, Chennai, 1981.
[10] Vanamamali, Na. A. I. Oparin (Tamilakkam). *Uyirin Totram.* NCBH, Chennai 98, 2008.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 5, இதழ் - 1, கார்த்திகை 2056 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திருவாசகம் உணர்த்தும் பஞ்சபூத தத்துவமும் வழிபாடும்

**ந. சரவணன்** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0008-3264-0586
**முனைவர் செ. மகேஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280
**DOI: 10.5281/zenodo.18866455**

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகம் தோன்றியதை அறிய முற்படுகையில், அண்டத்தை இயக்கும் சக்தி இறைவன், 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்திற்குள் இருக்கும் ஐம்பூதங்களானது உலகத்தை இயக்குகின்றது. அவற்றிலே இறைவன் இருந்து இயக்குகிறான் என்பதும் உணரப்படுகின்றது. திருவாசகத்தில் பஞ்சபூதங்களைப் பற்றி மாணிக்கவாசகர் குறிப்பிட்ட இடங்களை எடுத்துக்காட்டி, கடவுள் தன்மைக்கு மனிதன் செல்லவேண்டும் என்றால் பஞ்சபூதங்களை பயன்படுத்துவதும், வணங்குவதும் அவசியம் என்பது கூறப்படுகின்றது. மேலும், பஞ்சபூதங்களின் ஆளுமை இருக்கும் இடங்கள் எல்லாம் சுட்டிக்காட்டப்பட்டு பஞ்சபூதங்கள் இல்லையேல் உலகம் இல்லை என்பது விளக்கப்பட்டுள்ளது. மனிதனின் ஆரோக்கியமான முழுமையான வாழ்விற்கு பஞ்சபூதங்கள் எவ்வாறு அவசியம் என்பதை உணர்த்தப் பட்டு அதற்கான வழிபாடுகளும் கூறப்பட்டுள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** தத்துவம், ஐந்து பூதங்கள், வழிபாடு, மாணிக்கவாசகர், *திருவாசகம்.*

## முன்னுரை

இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் எல்லாம் பஞ்சபூத சக்தியில் வாழ்கிறது. பல்வேறு உடலாகத் தோற்றுவிக்கப்பட்ட உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியானது மனித உடலாக பிறப்பெடுக்கையில் கடவுள் தன்மைக்குள் வருவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளும் உண்டு. இதனை விளக்கும் வகையில் திருவாசகம் அமைந்துள்ளது. இத்திருவாசகத்தில் மாணிக்கவாசகர் குறிப்பிடும் பஞ்சபூதங்களில் இறைவன், பஞ்சபூதங்கள் நிறைந்துள்ள தன்மை, பஞ்சபூதங்கள் மூலம் இறைவனை வழிபடுதல் போன்றவைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## பஞ்சாட்சர மந்திரம்

திருவாசகத்தில் காணப்படும் சிவபுராணப் பாடல் வரிகளில் முதலில் **"நமசிவாய வாழ்க!" (திருவாசகம், பா. 1)** என்று தொடங்கப்படுகின்றது. பிறகு **"நாதன் தாள் வாழ்க!" (திருவாசகம், பா. 1)** என்று வாழ்த்துவதால் முதலில் பஞ்சபூத சக்திகளையும் பிறகு அப்பூதங்களை இயக்கும் இறைவனையும் வாழ்த்துவதாகவே அமைந்துள்ளபடியால் வணங்குதற்குரிய ஐம்பூதங்கள் உயிரினங்களுக்கு மிகவும் இன்றியமையாதன என்பது புலப்படுகின்றது. "நமசிவாய ந- நிலம், ம – நீர், சி – நெருப்பு, வா – காற்று, ய – ஆகாயம் ஆகியவையே பிரபஞ்சத்தின் அடிப்படைக் கூறுகளாகும். இவற்றை முதலில் வணங்கவேண்டும் என்பது புலனாகின்றது. இறைவன் வேறு பஞ்சபூதங்கள் வேறு அல்ல என்பதை உணர்த்தும் வகையில், 'ந கரம்' திருவடியையும், 'ம கரம்' திருஉந்தியையும், 'சி கரம்' திருத்தோள்களையும், 'வ கரம்' திருமுகத்தையும், 'ய கரம்' திருமுடியையும் குறிக்கின்றது. இதனை சிவ வாக்கியார் 'அக்கரம் அநாதியே அமர்ந்ததே சிவாயமே' என்கிறார்.

**பஞ்சபூதங்களால் ஆன உலகம்**

உல் – முன்மை, தோன்றுதல், வளைதல், சுற்றுதல், உலாவுதல் எனப் பல பொருள் குறித்த ஒரு சொல் . உலகு – உருண்டையானது, சுற்றிவருவது. (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி, ப. 6) வானியல் வல்லுநர்களாகிய தமிழ்ச் சான்றோர்கள் உலகத் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகையில், கி.மு. 585 இல் கிரகணம் தோன்றுவதை முன் கூட்டியே தெரிவித்தவர் மைலீட்டஸ் தீவில் பிறந்த தேலிஸ். இவரே உலகம் எதனால் ஆனது என்ற கேள்வியைக் கேட்டு – இந்த உலகம் நீரால் ஆனது என்றும் நீரே எல்லாப் பொருள்களுக்கும் மூலமானது என்று கூறினார். அவருக்குப் பின் வந்த அறிஞர்கள் பலர் உலகம் நெருப்பால் ஆனது, காற்றால் ஆனது என்றெல்லாம் கூறினர். ஆனால் தொல்காப்பியர் என்றொரு விஞ்ஞானி இவ்வுலகம் ஐம்பெரும் இயற்கைப் பொருள்களின சேர்க்கை பெற்றது என்று மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

**நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல்., 159: 1-2)**

என்கிறார். அளத்தற்கரிய ஐம்பெரும் பொருள்களாகிய நிலம், தீ, நீர், வளி (காற்று), விசும்பு என்ற ஐந்தும், கலந்தும் மயங்கியும் கிடப்பது இவ்வுலகம் என்றார். இஃது அறிவியல் உண்மை. உலகம் என்பது உலகத்தையும் உலகத்தில் உள்ள பொருள்களையும் குறிக்கும். உலகம் ஐம்பூதங்களால் விரவி நிற்றலோடு பொன்னும் மணியும் கலந்து நிற்றல் போல எல்லா பொருள்களும் வேற்றுமையின்றி இருப்பதால் கலந்த மயக்கம் என்கிறார். என்று இளம்பூரணர் விளக்குகிறார்.

“இவ்வுலகமும் உலகப் பொருள்களும் இவ்வைந்து பூதங்களால் உருவானவை. அழியும்போதும் இவ்வைந்தாகவே மாறும். மீட்டுருவாக்கம் பெற்று இவை சேர்ந்தும் பிரிந்தும் பலவகைப் பொருள்கள் ஆகின்றன. மனித உடலுட்படத் தோன்றியும் மறைந்தும் உலகம் நடக்கிறது” என்று விளக்கம் தருகிறார் தமிழண்ணல்.

**மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை… (புறநானூறு, பா. 2: 1 – 6)**

அணுச்செறிந்த நிலம், நிலத்தின்கண் ஓங்கிய ஆகாயம், ஆகாயத்தைத் தடவி வரும் காற்று, காற்றின்கண் தலைப்பட்ட தீ, தீயோடு மாறுபட்ட நீர் என்ற ஐம்பூதங்களின் தன்மை புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியம் படைக்கும் அறிவு மிக்க அறிஞர்கள் விஞ்ஞான அறிவும் பெற்றவர்களாகவே விளங்கினர். அவர்களுள் பரிபாடலை வழங்கிய கீரந்தையார் என்னும் புலவர், ஐம்பூதங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட**
**விசும்பில் ஊழி ஊழூழ் செல்லக்**
**கருவளர் வானத்து இசையிற் றோன்றி**
**உருவறி வாரா ஒன்றன் ஊழியும்**
**உந்துவளி கிளர்ந்த ஊழூ ழூழியும்**
**செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு**
**தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று**
**உண்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு**
**மீண்டும் பீடுயர்பு ஈண்டு அவற்றிற்கும்**
**உள்ளி டாகிய இருநிலத்து ஊழியும்…(பரிபாடல், பா. 2: 1 – 15)**

ஒன்றுக்கொன்று மாறிவரும் இயல்புடைய திங்களும் ஞாயிறும் கெட்டு விண்ணுலகமும் வெறும் பாழாகி விடப் பின்னர் – வானமும் கெட்டு இல்லையாகச் சிதைந்து ஒடுங்கிய ஊழிக் காலங்கள் பற்பல முறையாகக் கழிந்தன. முதலில் வானம் தோன்றியது. வானத்தினின்று காற்று தோன்றிக் கிளர்ந்து வீசி நிற்கும் காற்றினின்று தீ தோன்றி, தீயினின்று பனியும் மழையும் தோன்றி நீரினுள் மூழ்கி ஒடுங்கிய பெரிய ஐந்தாம் பூதமாகிய நிலம் தோன்றியது. மறுபடியும் நீரினால் உலகம் அழிந்து மீண்டும் தோன்றும் என்று உலகம் தோற்றம் குறித்து விளக்கப்படுகின்றது.

**பஞ்சபூத சக்தியுள் உறையும் இறைவன்**

உலகம் தோன்றவதற்குக் காரணமானவர் யார் என்பதை உற்றுநோக்குகையில் மணிவாசகப் பெருந்தனை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்ற பஞ்சபூதங்களை இயக்குவது இறைவன் அவ்விறைவன் பஞ்சபூதங்களை இயக்குவதோடு பஞ்சபூதங்களுக்குள்ளும் இருக்கிறான் என்பதைக் குறிப்பிடுகிறார். **பூதங்கள் ஐந்தாகிப் புலன் ஆகிப் பொருள் ஆகிப் பேதங்கள் அனைத்துமாய்ப் பேதம் இலாப்பெருமையனை” (திருவாசகம், கண்டடப்பத்து, பா. 10)** என்ற அடிகளில் இறைவன் பஞ்சபூத வடிவனனாகவும், பேதங்கள் உள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் பேதமில்லாமல் நிறைந்திருப்பவன் என்றும் குறிப்பிடுகின்றார். பஞ்சபூதமாகவும் அதற்கு அப்பாலும் இறைவன் நிறைந்திருக்கிறான் என்பதை கோயில் திருப்பதிகத்தில் கூறுகையில்,

**நிரந்த ஆகாயம் நீர்நிலம் தீகால்**
**ஆயவை அல்லையாய் ஆங்கே**
**கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்**
**ண்ணுறக் கண்டுகொண்டின்றே (திருவாசகம், கோயில் திருப்பதிகம், பா. 6)**

என்றும், உன்னைக் கண்டு உள்ளத்தில் ஏற்று மகிழ்கின்றேன் என்றும் கூறுகின்றார். பல இடங்களில் இறைவன் ஐம்பூதங்களாய் விளங்குகின்றான் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

**“அம்பரமே நிலனேயனல் காலொடப் பானவனே”**
**(திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், பா. 20)**

**சச்சையனே மிக்க தன்புனல் விண்கால் நிலநெருப்பாம்**
**விச்சையனே விட்டிடுதி கண்டாய் வெளியாய் கரியாய்**
**(திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், பா. 31)**

என்று திருவாசகம் பகுத்துள்ளமையை அறியமுடிகிறது.

**நினையப் பிறருக்கு அரியநெருப்பை**
**நீரைக்காலை நிலவை விசும்பை (திருவாசகம், புணர்ச்சி பத்து, பா. 7)**

என்று புணர்ச்சி பத்தில் சிவபெருமான் ஐம்பூதமாய் விளங்குகின்றான் என்று கூறுவதன் மூலம் ஐம்பூதமும் பரமனும் வெவ்வேறில்லை என்பது உணரப்படுகின்றது.

**அட்டமூர்த்தியானவன்**

இறைவன் ஆகாயம், காற்று, நீர், தீ, மண், சீவாத்மா, கதிரவன், சந்திரன் ஆகிய எட்டிலும் கலந்து நிற்பதை அட்டமூர்த்தி என வரையறைச் செய்துள்ளளனர்.

**நிலம்நீர் நெருப்பு உயிர்நீள் விசும்பு நிலாப்பகலோன்**
**புலன்ஆய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்**
**உலகுஏழ் எனத்திசை பத்து எனத் தான் ஒருவனுமே**
**பலஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ (திருவாசகம், திருத்தோள்நோக்கம், பா. 5)**

என்பதில், இறைவன் அட்டமூர்த்திகளாகவும், ஏழு உலகங்களாகவும், பத்து திக்குகளாகவும் கலந்து நிற்கின்றார் என்பது புலப்படுகின்றது.

**நாதனே போற்றி போற்றி**
**போற்றிநின் கருணை வெள்ளப்**

**புதுமதுப் புவனநீர் தீக்**
**காற்றிய மானன் வான**
**மிரு சுடர்க் கடவுளானே (திருவாசகம், காருண்யத்திரங்கல், பா. 63)**

என்ற அடிகளில் சிவபெருமானே! உனது கருணையானது புதிதாய் அப்பொழுதே பூத்த மலரிலுள்ள தேன் போன்றது. பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், சீவாத்மா ஆகிய அட்டமூர்த்திகளாய் நீ இருக்கின்றாய்.! உன்னையே நான் எப்பொழுதும் வணங்குகின்றேன் என்கிறார்.

**வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி**
**யூனாகி யுயிராகி உண்மையுமா யின்மையுமாய்க்**
**கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே (திருவாசகம், அறிவுறுத்தல், பா. 15)**
**அட்டமூர்த்தி அழகன் இன்னமுது**
**ஆய் ஆனந்த வெள்ளத்தான்**
**சிட்டன் மெய் சிவலோக நாயகன் (திருவாசகம், சென்னிப்பத்து, பா. 2)**

என்றும் திருவாசகம் குறிப்பிடுவதன் மூலம் பஞ்சபூதங்களில் மட்டுமல்ல சந்திரன், சூரியன், உயிருக்குள் உறைந்த சீவாத்மா போன்றவற்றிலும் இருக்கிறான். அதனால் அவன் எட்டு வடிவங்களிலும் கலந்து நிற்கும் அழகன், சிவலோகத்திற்கு முதல்வன் என்று மாணிக்கவாசகர் பரம்பொருளின் தன்மையை உணர்ந்து பாடியிருக்கின்றார் என்பதை அறியமுடிகின்றது. பஞ்சபூதங்கள் பிறப்பிக்கப்பட்ட உயிரினங்களில் மட்டுமின்றி சிறு தேவதைகளிலிருந்து மிகப்பெரும் ஆற்றலாகிய சிபெருமான் வரை அனைத்திற்கும் மூலமானது ஐம்பூதங்களே என்பதை விளக்கும் வகையில்,

**வாரணங்களுக்கும் ஐந்து பூதம்**
**மறுபெயர் தேவதைக்கும் ஐந்து பூதம்**
**தாராள அண்டமெல்லாம் ஐந்து பூதம்**
**சதாசிவமாய் நின்றதும் ஐந்து பூதம்**
**கூரான யோனி எல்லாம் ஐந்து பூதம்**
**குறும்பனை ஐந்தினால் எல்லாம் ஆச்சு (சட்டைநாதர், பா. 36, ப. 42 – 44)**

என்று சட்டை நாதர் குறிப்பிடுகிறார். இதன் மூலம் இறைவனுக்கும் உயிரினங்கள் அனைத்திற்கும் மூலமாய் விளங்குவது பஞ்சபூதங்களே என்பது தெளவாக உரைக்கப்படுகின்றது.

**உயிரினங்களில் பஞ்சபூதங்கள்**

**“உயிர் ஆன்மாவின் சலனம். தெய்வத்தன்மையுடையது. கடவுளின் சிறு பொறி. அதனை அறிய முடியாது.”** உயிரின் தோற்றம் ப.5 என்று மதக் கோட்பாடுகளில் கூறப்படுகிறது. விஞ்ஞானிகள் உயிர் என்பதற்கு, **“அணுக்கள் கூடுகின்றன. சிறுசிறு அளவில் அணுக்கள் கூடும்போது அளவு மாறுதல்கள் உண்டாகின்றன. பல அணுக்கள் கூடி ஒரு துணுக்கு உண்டாகும்பொழுது அதன் அமைப்பு சிக்கலாகிறது. அப்பொழுது புதிய பண்புகள் பொருளுக்கு உண்டாகின்றன. இவ்வாறு அணுச்சேர்க்கையின் ஒரு கட்டத்தில் மிகவும் சிக்கலான அமைப்புள்ள துணுக்குகள் தோன்றின. அப்பொழுது பொருள்களிடத்துத் தோன்றிய பண்புதான் உயிர்”** உயிரின் தோற்றம் முகவுரை ப.4 என்கின்றனர். அந்த விஞ்ஞானிகளுள் குறிப்பிடத்தக்கவர் ஓபாரின் என்பவராவார். உயிர்களின் தோற்றம் பற்றி வி. ஐ. லெனின் தமது **“பொருள்முதல் வாதமும், நேர் அனுபவ சித்தாந்த விமர்சனமும்” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். உலகத்தில் மனிதனோ, உயிர்களோ வாழ முடியாத ஒரு நிலைமை இருந்தது** என்பதை விஞ்ஞானம் நிரூபித்திருக்கிறது. உயிரின் தோற்றம் ப.16

**“உலகம் ஜொலிக்கும் தீப்பிழம்பாக ஒரு காலத்தில் இருந்தது என்பதும் பின்பு படிப்படியாகக் குளிர்ந்து முதலில் செடிகளும் பிராணிகளும் தோன்றின. பிராணிகளின் அமைப்பில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக சிலவகை மனிதக்குரங்குகள் தோன்றின. இதன் பின்பே மனிதன் தோன்றினான்.”** என்று அராஜகவாதமா? சோஷலிஸமா? என்ற நூலில் ஜே.வி.ஸ்டாலின் மேற்கூறியவாறு எழுதுகிறார். இதனை உற்றுநோக்குகையில் மணிவாசகப் பெருந்தகையும் **“புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகிப் பல் விருகமாகி” - திருவாசகம் சிவபுராணம் பா.எ 30** என்று கூறியிருப்பதால் முதலில் தாவரங்கள் தோன்றியிருக்கலாம் என்பதை அறியமுடிகிறது.

**பிண்டத்தில் உள்ளதே அண்டம்**

உடம்பை சோற்றால் அடித்த பிண்டம் என்பார்கள். அது காற்றாலடித்த பிண்டமும்தான் அண்ட உழவானாலும் சரி பிண்ட உழவானாலும் சரி. அதற்குக் காற்று ஓர் இன்றியமையாத ஆதாரம் காற்றின் கொடை குன்றிவிட்டால் உழுது பயனில்லை.

**அண்டத்திலுள்ளதே பிண்டம்**
**பிண்டத்திலுள்ளதே அண்டம்**
**அண்டமும் பிண்டமு மொன்றே அறிந்துதான்**
**பார்க்கும் போது (திருமந்திரம், பா. 896)**

அண்டம் என்பது இந்த பிரபஞ்சம். இந்த பிரபஞ்சம் பஞ்ச பூதங்களால் ஆனது. இதனையே பிரபஞ்ச சக்தி என்பர்.

அண்டம் என்ற சொல் உருண்டை அல்லது முட்டை வடிவத்தைக் குறிக்கும். உருண்டு திரண்டு அக்னிக் காற்றாயிருப்பது சூரியனாகும். சிதறி வந்து குளிர்ந்து இறுகியிருப்பது நிலவுலகம். இந்த விண்ணுலகமும், மண்ணுலகமும், பல்வேறு அண்டங்களும் இறைவனின் படைப்பிற்குச் சான்றாக அமைகின்றது என்பதை,

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்ப ருந்தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொருகோடியின் மேற்பட விரிந்தன**
**இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்**
**சிறிய வாசகப் பெரியோன் தெரியின் (திருவாசகம், திரு அண்டப்பகுதி, 1-6 அடிகள்)**

திருவாசகம் எடுத்துரைக்கிறது. ஒரு வீட்டின் மேற்கூரையில் அமைந்துள்ள சிறிய துவாரம் வழியாக ஒளி ஊடுருவி வருகின்றது. அவற்றில் அணுத்துகள்கள் அலைந்து திரிவது தெரிகிறது. அதுபோலேவே அண்டவெளியில் கோள்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. சிறியதாகிய அணுவுக்கும், பெரியதாகிய அண்டத்துக்கும் அடிப்படையாக இருக்கும் இறைசக்தி ஒன்றே என்பதை மாணிக்கவாசகர் விளக்கியுள்ளார்.

பிரபஞ்ச சக்தியானது உடலில் கரு உற்பத்திக்கு முக்கிய காரணமாகிறது. சுக்கிலமும் சுரோனிதமும் இணையும்போது காற்று, நீர், நெருப்பு மூன்றும் சேர்ந்து மண் உருவு கொண்டு உடலாய் மாறி உயிர் சேர்ந்து வாதம், பித்தம், கபம் என மனிதன் மண் உருவு கொண்டு உடலாய் மாறி உயிர் சேர்ந்தது. மனிதனை மண்ணிலிருந்தே படைத்தோம் என்கிறது அல் குரான்.

**பரமாய சக்தியுள் பஞ்சமா பூதம்**
**தரமருள் தோன்றும் பிறப்பு (ஔவை குறள் 10 பாகம் 1)**

என்று ஐம்பூதங்களின் தன்மைகள் ஒன்றிணைந்தே இப்பிரபஞ்சம் தோன்றியுள்ளது. கடவுள் பஞ்சபூதங்களின் வழி உருவெடுத்து, அருளின் வழியாக உயிர்களைப் பிறப்பிக்கிறான். என்கிறது இப்பாடல். கரு நிலையில் உள்ள உண்மை சக்தி தன்னை வெளிப்படுத்துவதற்காக

பஞ்சபூதங்களாக உருமாறுகிறது. இதன் கலவை மாறின் புதிய புதிய பிறப்புகள் தோன்றுகின்றது என்பதை ஔவையாரின் அடிகளால் அறியமுடிகிறது. இறைவனே

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும் (குறள் – 271)**

கபடம் நிறைந்த ஒருவரின் பொய்யான ஒழுக்கத்தைக் கண்டு அவனது உடம்போடு கலந்துள்ள பஞ்சபூதங்களும் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) தமக்குள் சிரித்துக் கொள்ளும் என்று கூறுவதன் மூலம், உண்மையாக நடந்து கொள்வதன் மூலம் ஒரு மனிதனின் பிரபஞ்ச சக்தி நிலைபெற்று ஆரோக்கியமாக இருப்பான் என்பதை இக்குறளின் வழி விளக்கப்படுகின்றது.

**மனித உடலில் பஞ்சபூதங்களில் அளவுகள்**

பஞ்சபூதங்களால் ஆன மனித உடலில் 72 %நீரும், 12% நிலமும், 6% காற்றும், 4% நெருப்பும், 6% ஆகாயமும் கலந்துள்ளது.

**ஐம்புலன்களில் பஞ்சபூதம்**

உடல் - நிலம், வாய் - நீர், மூக்கு - காற்று, காது - ஆகாயம், கண்-நெருப்பு

**உடல் உறுப்புகளில் பஞ்சபூதங்கள்**

**மண் – எலும்பு,தோல், இறைச்சி, நரம்பு, முடி**
**நீர் – உதிரம், மூளை, உமிழ் நீர், நிணம், விந்து**
**தீ – பசி, சோம்பல், காமம், நீர்வேட்கை, பயம்**
**காற்று – போதல், வருதல், ஒடுங்குதல், தொடுதல், நோய்படுதல்**
**ஆகாயம் – வெகுளி, மதம், மானம், ஆங்காரம், உலோபம்**

**இதனை பஞ்சமரபு என்ற இசை நூல் குறிப்பிடுகையில்,**

**“நல்ல நரம்பிறைச்சி யென்புமயிர் தோலுஞ்**
**சொல்லிய மண்ணின் குணமாகும் – மெல்லியலாய்**
**நீர்மூளை சுக்கிலம் நெய்யார் நிணமுதிரம்**
**பார்மீதி னீரதனின் பண்பு” - பஞ்சமரபு பா.எ 33**

என்பதில் மண்ணின் கூறு, நீரின் கூறு கூறப்படுகின்றது. தீயின் கூறு மற்றும் காற்றின் குணங்களைக் குறிப்பிடுகையில்,

**பசிசோம்பு மைதுனங் காட்சிநீரு வேட்கை**
**தெசிகின்ற தீக்குணமோ ரைந்து – மொசிகின்ற**
**போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்**
**வாக்குடைய காற்றின் வகை. (பஞ்ச மரபு, பா. 34)**
**ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்**
**நீங்கா வுலோபம் முடனைந்தும் (பஞ்ச மரபு, பா. 35)**

என்ற அடிகளில் ஆகாயத்தின் கூறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஆறு ஆதாரங்களில் பஞ்சபூதங்கள்**

நிலம் – மூலாதாரம், நீர் – சுவாதிஷ்டானம், தீ – அனாகதம், காற்று – விசுத்தி, ஆக்கினேயம் – வான்

**நோய்களைத் தீர்க்கும் பஞ்சபூத மூலிகை**

**பூ நெல்லி நீர்மிளகு பொற்கடுக்காய் வான் மஞ்சள்**
**கானகத்து வேம்பரிசி காரிகையே மானக்கேள்**
**ஒன்றரை ஒன்றேகால் ஒன்று உறுதி முக்கால்**
**கன்றரைக்கை யான் நீரில் தேய் (சித்தர் இலக்கியம், முதல் பகுதி)**

பஞ்சபூதங்களால் உடம்பில் அமையப்பெற்ற இருபத்தைந்தை, உடம்பின் அக க்கூறுகள் என்று குறிப்பிடுவர் இவையல்லாமல் மேலும் பல அகக்கூறுகள் உடம்பிலுள்ளதாகத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது. உடம்பில் அமைந்த அக க்கூறுகள் இருபத்தைந்து 4,00,48,500 அகக்கூறுகள்

என்று விரித்துரைக்கப்படும். அவை அனைத்தும் 96 தத்துவங்களாக குறிக்கப்படுகின்றன. அவற்றை 25 ஆக அடக்கிக் கூறுவர். அவற்றுள் சைவ சமயம் 36 தத்துவங்களைத் தனது கொள்கைகளாகக் கொண்டிருப்பர்.

மண் – 5, நீர் – 4, காற்று – 3, தீ – 2, ஆகாயம் – 1 இந்த விகிதத்தில் மருந்துகள் கூட்டப்படுகின்றன. அந்த மூலிகைப் பொருட்களாவன நெல்லிக்காய், மிளகு, கடுக்காய், மஞ்சள், வேம்பரிசி என்னும் மருந்துப் பொருள்கள் முறையே மண், நீர், தீ, காற்று, ஆகாயம் போன்ற சக்திகள் அடங்கியுள்ளன. உடலின் அகக்கூறுகளில், வாதம் – காற்றின் கூறாகவும், பித்தம் – தீயின் கூறாகவும், கபம் – நீரின் கூறாகவும் அமைந்துள்ளன் அவற்றின் மிகுதி குறைவைப் பொறுத்து நோயினைக் கண்டறிந்து பஞ்சபூத சக்தியுடைய மூலிகையால் குணப்படுத்துவர்.

**ஆறுசுவைகளுள் பஞ்சபூதங்கள்**

நீர் – உப்பு, நிலம் – இனிப்பு, தீ – கசப்பு, காற்று – துவர்ப்பு, காரம், ஆகாயம் – புளிப்பு இதில்,

இனிப்பு = மண் + நீர், புளிப்பு = மண் + தீ, உவர்ப்பு = நீர் + தீ, கைப்பு = காற்று + ஆகாயம், கார்ப்பு = தீ + காற்று, துவர்ப்பு = மண் + காற்று என சுவைகளில் ஐம்பூதங்கள் கலந்திருக்கின்றன.

**மனிதப் பிறவியின் நோக்கம்**

மனிதப்பிறவியின் மூலம் ஐம்புலன்களின் ஆசைகளை அறுத்து எறிவதன் மூலம் இவ்வுலகத்தை வசப்படுத்தி இறைதன்மையை அடைவதே மனிதப்பிறவியின் நோக்கமாகும்.

**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு (குறள் - 27)**

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படும் ஐந்து புலன்களின் வழி பிறக்கும் ஆசைகளை அறுத்து எறிபவனின் வசப்பட்டதே இவ்வுலகம். உலகத்தை வசப்படுத்த ஐம்புலன்களால் கட்டுப்படாமல் இருக்கும் நிலை கடந்து உள்முகமாக பார்க்கும் நிலையாகும். அவற்றை அடைய கடவுளை அறியவேண்டும். அதற்கு குருவின் வழி செல்லுதல் நலம்.

**கடவுள் விளக்கம்**

**“கடவுள் கட உள் கட – உள்ளே கட. உன் உள்ளத்தைக் கடந்து செல். உன்னை அறிந்து – உணர்ந்து உள் கடந்தால் கடஉள் நிலை அடையலாம்.” (புலவர். கோ.அன்பழகன், கடவுள் அறிவில், ப. 9)** கடவுள் என்ற சொல்லின் விளக்கத்தைப் பார்க்கும்போது, கடவுள் என்ற சொல்லிலேயே விளக்கம் தரும் அளவிற்கு தமிழ்ச் சொல் அமைந்திருப்பதை அறியமுடிகிறது. வேதாந்தத்தில் பிரம்மம் பரந்தது என்று பொருள் தருவது. என்றாலும் முழுமைப் பொருள் உணர்த்தாது. கடந்து இருப்புநிலையை அடையும் செய்முறையை கடவுள் என்ற சொல் விளக்குவது தமிழ்ச்சொல் மட்டுமேயாகும்.

கடவுள் என்னும் சொல் ‘கட’ என்ற பகுதியையும் ‘உள்’ என்ற விகுதியையும் உடையது. ஒவ்வொரு பொருளுக்கும் சிறப்பு இயல்பு, பொது இயல்பு என்று இரு இயல்புகள் உண்டு.

**கடவுள் என்னும் சொல்லாட்சி**

திருவாசகத்தில் கடவுள் என்னும் சொல்லாட்சி எட்டு இடங்களில் காணப்படுகிறது. அவ்விடங்கள் வருமாறு, காக்கும் கடவுள் (3 – 14), கைதரவல்ல கடவுள் (4 – 86), கருத்துடைக் கடவுள் (3 – 16), கரும்பணக் கச்சைக் கடவுள் (3 – 96), கழுநீர் மாலைக் கடவுள் (4 – 217), இருசுடர்க் கடவுளானே (67), கடவுளே போற்றி (68), எனை ஆண்ட கடவுளே (535) அ (537) இவற்றுள் பெரும்பாலான இடங்களில் கடவுள் பசுஞானத்தாலும் பாச ஞானத்தாலும் அறியப்படாத அளவுக்கு, எல்லாவற்றையும் கடந்தவர் என்னும் பொருளில், இச்சொல்லாட்சி கையாளப்பட்டுள்ளது.

**கடவுள் நிலையை உணர்ந்தவர்**

செயலற்று சும்மா இருப்பதே இருப்பு. கருத்துக்கள், கொள்கைகள், தத்துவங்கள், சமயக்கோட்பாடுகள், விதிமுறைகள், வேதங்கள், நினைவுகள், எண்ணங்கள் எதுவுமே இல்லாமல் முழுதும் அழிந்து மனமற்று, அறிவுமற்று செயலற்று இருப்பதே கடவுள் நிலையை அடைதலின் அறிகுறிகள் ஆகும். எண்ணமழிவு, மனமழிவு, தற்போத தன் உணர்வு அழிவு, மயக்க நிலை போன்ற தன்னை இழந்த, தன்னை மறந்த நிலைக்கு செல்பவர் மட்டுமே முழுமையை அதாவது கடவுள் நிலையை உணர்ந்தவர் நெருங்கியவர் ஆவர்.

**வாழ்வில் முழுமையடைதல்**

தனிப்பட்ட தமது வாழ்வில் உண்மை, நேர்மை, நிடுநிலைமை, சகிப்புத் தன்மை, பற்றின்மை, பணிவு, ஒழுக்கம், அறம் ஆகிய நற்குணங்கள் உள்ளவர் மட்டுமே இருப்புநிலை எனும் கடவுள் நிலையின் முழுமையை அடையவே அறியவோ உணரவோ முடியும். இது மறுக்க முடியாத உண்மை என்பதை அனைவரும் உறுதியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

**மக்களின் நம்பிக்கை**

இறைவன் என்பவன் ஓர் உருவம் என்றும், மக்களுக்கும் உயிர்களுக்கும் துன்பங்கள் பெருகும்போது ஓடி வந்து உதவி செய்பவர் என்றும், உலகில் தீமைகள் பெருகும்போது அவதாரம் எடுப்பவர் என்றும் சமயங்களும் சமய நூல்களும் மக்களிடையே நம்பிக்கையை வளர்த்து விட்டன. கடவுள் அறிவியல் என்பது ஓர் இயக்க (உயிர்ப்பு) அமைப்பு முறை. அசைவறு நிலையில் இருந்து அசையும் (உயிர்க்கும்) நிலை வரை பெருகி வளர்ந்து, மீண்டும் தொடக்க நிலைக்கே – இருப்பு நிலைக்கே சென்றடையும் அமைப்பு முறை. தோற்றமும் ஒடுக்கமும் அமைந்த அமைப்பு முறையாக இருக்கிறது. கடவுள் பயணத்தை நான்கு வழிகளில் அடக்குவர். சரியை – கிரியை – யோகம் – ஞானம் கடவுளை அடையவேண்டிய பயணங்களில் பயணித்த பிறகு பக்குவமான நிலையில் குருவின் தீட்சை அவசியம்.

**சரியை**

சரியை நெறியில் பஞ்சபூதங்களின் மூலம் வழிபடுதல் என்பதைவிட தனக்காக இல்லாமல் பிறருக்காக, தொண்டு செய்வதன் மூலம் இறைவனை வழிபடத் தொடங்குதல் இப்பணியினால் பஞ்சபூதங்கள் துணை செய்யும்.

சைவ வழிபாட்டு முறைகளுள் ஆரம்ப நிலையாக சரியை நெறி இருக்கின்றது. சரியையைப் பின்பற்றி செயல்படுகையில் பக்குவமான மனநிலை வருகின்றது. சரியையிலிருந்த ஆரம்பித்த வழிபாட்டுநெறியானது வளர்ந்து ஞான நிலைக்கு உயர்த்துகிறது என்பதைத் தாயுமானவர்,

**விரும்பும் சரியைமுதல்**
**மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்புமலர் காய்கனிபோல்**
**அன்றோ பராபரமே (பராபரக்கண்ணி, ப. 157)**

என்கிறார். சரியையின் மூலம் இறைவனுக்கு நன்மை செய்கிறோம் என்று எண்ணலாகாது. அப்பணிகளால் உயிர்கள் உய்யுதல் வேண்டும் என்பதன் பொருட்டு நடத்தப்படுவதாகும். சரியை என்பது ஆலயத்திருப்பணிகள் மட்டும் செய்வது கிடையாது. **“நந்தவனம் அமைத்தல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி, அவர்களுக்குச் செய்யவேண்டிய பணிகளைச் செய்தல் ஆகியனவும் சரியையில் அடங்கும் என்பர்.” (வ.ஆ.தேவசேனாபதி, சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள் ப.115)** இச்சரியை மேற்கொள்ளுவதற்கு சிவனருள் வேண்டும். மாணிக்கவாசகர் நால்வகை நெறிகளையும் பின்பற்றுவதற்காக இறைவனின் அருள் வேண்டி பாடுகிறார். அதில்,

**பாடவேண்டும்நான் போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்**

**காடவேண்டும்நான் போற்றி அம்பலத்**
**தாடும் நின்கழற் போது நாயினேன்... (திருவாசகம், ஆனந்தாதீதம், பா. 100)**

என்று வேண்டுகிறார். கிரியை என்பது சரியையில் கூறப்பட்ட செயல்களை விட சற்று மேம்பட்டது. முறைப்படி குருவிடம் மந்திரங்கள் கற்று அவரின்வழியைப் பின்பற்றி இறைவனை வழிபடும் முறை சற்புத்திரமார்க்கம் எனப்படும். இது ஈசனை எப்போதும் உடலாலும் மனதாலும் பூஜித்துக் கொண்டிருப்பதாகும். ஞானசம்பந்தர் கிரியை வழி நின்று ஈசன் அடி சேர்ந்தார். இதனை,

**கிரியையோ கங்கள் கிளர்ஞான பூசை**
**அரிய சிவனுரு அமரும் அரூபம்**
**தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை**
**உரியன நேயத் துயர்பூசை யாமே (திருமந்திரம், பா. 1448)**

என்று திருமூலர் கூறுகின்றார்.

**கிரியை**

நிலம் - சிலை வழிபாடு மற்றும் நிவேதனப் பொருட்கள், நீர் – அபிஷேகம், கும்பத்தில் நீர், நீரை வைத்து வழிபடுதல், தீ – தீபாரதனை, விளக்கேற்றுதல், யாகம் வளர்த்தல். காற்று – பாடல்கள் பாடுதல், வாத்தியங்கள் வாசித்தல், மணி ஓசை, மந்திர உச்சாடனம் செய்தல், ஆகாயத்தின் மூலம் வழிபடுதல் என்பது தியானம் செய்தல் போன்றவற்றுள் அடங்கும்.

அகத்தாலும் புறத்தாலும் செய்யப்படும் இத்தகைய கிரியைத் தொண்டின்மூலம் வல்வினை மாயும் என்று கூறப்படுகின்றது. கிரியை நெறியை மாணிக்கவாசகர் பாடுகையில்,

**சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்**
**கண்ணினைநின் திருப்பாதப் போதுக் காக்கி**
**வந்தனையும அம்மலர்க்கே யாக்கி வாக்குன்**
**மணிவார்த்தைக் காக்கி**
**அருவாய் உருவாய் ஆயபிரான்**
**உருமூன்றுமாகி உணர்வரிதாய் ஒருவன் (திருவாசகம், திருச்சதகம் சுட்டறுத்தல், 3, பா. 26)**

என்றும்,

**சிவனே சிறிது என்முகம் நோக்கி**
**ஆ ஆ என்ன ஆசைப்பட்டேன் (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 3)**

என்றும்,

**உடைந்து நைந்து உருகி உள் ஒளி நோக்கி உன் திருமலர்ப்பாதம்**
**அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன் (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 4)**

என்றும் குறிப்பிடுகின்றார்.

**யோகம்**

யோகம் என்பதற்குக் கூடுதல் அல்லது ஒன்றுதல் என்று பொருள். இஃது எட்டுக் கூறுகளாய் பகுத்து உரைக்கப்படும். அதுவே அட்டாங்க யோகம் எனப்படும். இது சகமார்க்கமாகும். ஆழ்ந்த தவம், தியானம் போன்றவற்றால் ஈசனோடு கலந்து வாழ்க்கையையே யோகமாக மாற்றிக்கொள்ளுதல். நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், தவம், சமாதி ஆகிய எட்டு நிலைகளில் படிப்படியாகத் தேர்ச்சி பெற்று இறைவனை அடையும் நிலையானது யோகமார்க்கமாகும். சுந்தரமூர்த்தி நாயனார் யோக வழியில் இறைவனடி சேர்ந்தார்.

திருவருளையே தமக்கு நிலைக்களமாகக் கொண்டு, அத்திருவருள் வழியே சித்தத்தைச் சிவனிடத்தில் ஒடுங்கச் செய்து, நீங்காத பேரின்பமாகிய சிவானுபவத்தைப் பெற்று இன்புறுவர். அத்தகைய பெருமக்களே சிவசித்தர் என்று திருமூலர் அறிவுறுத்தியுள்ளார்.

**முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியா**

**ஒப்பிலா ஆனந்த த் துள்ளொளி புக்குச்**
**செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்**
**தப்பரி சாக அமர்ந்திருந் தாரே (திருமந்திரம், பா. 125)**

செப்புவதற்கு அரிய சிவம் காணுதல் என்பது தம்முள் அன்புருவாகச் சிவத்தை உணர்தலும், தமது அகத்துள் நிறைந்திருக்கின்ற சிவமே, புறமாகிய பிரபஞ்ச வெளியிலும் நீக்கமற நிறைகின்ற அருள்தன்மையினை உணர்தலுமாகும். 'தான் தெளிதல்' என்பது, அட்டமா சித்திகளும் இன்னபிற அருள்பேறுகளும் தன்னலத்துக்காக அன்றி, பிறர்நலத்துக்காக அருளப்படுகின்ற பொதுநலத்தை உணர்ந்து, அன்பே தமது நிலையாக விளங்குதலாகும்.

யோகமார்க்கத்தின் வழி இறைவனைப் பற்றிய சிந்தனையில் எப்பொழுதுமே லயித்து இருக்கின்ற நிலையை மாணிக்கவாசகர் கூறுகையில்,

**தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரா?**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன் றென்பால்? (திருவாசகம், கோயில் திருப்பதிகம், பா. 10)**

என்று கூறுகிறார். திருத்தெள்ளேனம் பகுதியில் மாணிக்கவாசகர்,

**கயன்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்**
**கலந்து ஆண்டலுமே**
**நாம் ஒழிந்து சிவமான வாபாடித் தெள்ளேனங் கொட்டாமோ (திருவாசகம், திருத்தெள்ளேனம், பா. 11)**

என்பதன் மூலம் தான் இறைவனோடு ஒன்றி நின்ற தன்மையைக் கூறுகின்றார். **"எய்த்தேன் நாயேன் இனியிங்கு இருக்கில்லேன்" (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 6)** என்றும்,

**முத்தா உன்தன் முகம் ஒளிநோக்கி**
**முறுவல் நகை காண**
**அத்தா சால ஆசைப்பட்டேன் (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 6)**

என்று ஆசைப்பத்தில் குறிப்பிடுகின்றார்.

**ஞானம்**

ஞானம் என்பது நம் ஆன்மாவை ஈசனுக்கு அர்ப்பனம் செய்தல். அதன்படி இறைவனை உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளையும் கடந்து எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அறிவால் வழிபடும்முறை. இறைவனைப் பற்றிய உண்மையான அறிவைப் பெற்று, எப்பொழுதும் எல்லா நிலைகளிலும் இறைவனோடு இருத்தலாக எண்ணுதல், இறைவனோடு இரண்டறக் கலத்தலாகும். இது சன்மார்க்கம் எனப்படும். சன்மார்க்கத்தின் வழியில் மாணிக்கவாசகர் ஈசனை அடைந்தார்.

**சரியை, கிரியை, யோகம் போன்றவற்றை பயன் கருதாமல் சிவனிடம் கொண்ட பேரன்பால் செய்து வந்தால் தவம் ஏற்படும். அத்தவத்தை செய்துவந்தால் இருவினையொப்பு ஏற்படும். இதனால் வினை நீங்கும். இதனால் உயிரறிவு உள்ளவாறு விளங்கும். இதன்மூலம் உயிருக்கு ஞானம் கிடைக்கும். (சிவஞானபோதம் வழித்துணை, ப. 184)**

இம்மார்க்கத்தில் ஆன்மா சிறுகச் சிறுக இறைவனின் அறிவும் உள்சார்பற்ற திருநிலையுமாகிய பேரின்ப நிலையை எய்துகின்றது. இவ்வாறு இறைவனுடன் இரண்டறக் கலத்தலால் நேரிடும் இன்பத்தை விவரிக்க முடியாது. இந்நிலையில் ஆன்மா(உயிர்) முழுமையாக உலகில் மெய் உணர்வுக்கு அப்பால் இறைவனுடன் பேரின்ப நிலையில் திளைக்கின்றது. இதனை,

**இருளைத் துரத்திட்டு இங்கே வா என்று**
**அங்கே கூவும்**
**அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன் (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 1)**

என்னும் வரிகளும்,

**மொய்ப்பால் நரம்பு கயிறு ஆக**
**மூளை என்புதோல் போர்த்த**
**குப்பாயம்புக்கு இருக்ககில்லேன்**
**கூவிக் கொள்ளாய் கோவேஓ (திருவாசகம், ஆசைப்பத்து, பா. 2)**

என்ற வரிகளும் உணர்த்துகின்றது.

**ஏழைத் தொழும்பனே எத்தனையோ காலமெல்லாம்**
**பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே**
**ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந்த தென்பிறவித்**
**தாழைப்பறித்தவா தோணோக்கம் ஆடாமோ (திருவாசகம், திருத்தோணோக்கம், பா.13)**

என்னும் வரிகள் மாணிக்கவாசகரின் பிறவியை அறுத்து பேரின்ப நிலையை உணர்த்துகின்றது. இறைவனின் பேரின்பத்தில் கலக்க உதவும் நான்கு வழிமுறைகளையும் கடைபிடித்து மாணிக்கவாசகர் இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பதை ஆசைப்பத்தில் அறிந்துகொள்ளமுடிகிறது. உடலில் ஏற்படும் நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுகளை அகற்றி உடலைத் தொடர்ந்து சுத்திகரித்துக் கொண்டாலே பஞ்சபூதங்களின் நன்மைகளைப் பெறமுடியும். அதன் மூலம் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழமுடியும். பூதசுத்தி என்பது யோகக்கலையின் மிக அடிப்படையான சாதகப் பயிற்சி இதனைத் தொடர்ந்து செய்தால் உடல் ஆரோக்கிமாக இருக்கும்.

**நிலம்**

எளிதில் சீரணிக்க க்கூடிய உணவை உட்கொள்ளுதல் ஓர் உயிரை அழித்து உட்கொள்வதனால் நன்றி உணர்வுடன் உண்ணுதல் வேண்டும். உழைப்பினால் ஈட்டக்கூடிய உணவை உடகொள்வதன் மூலமும், உடலுக்குத் தேவையான ஆறுசுவை மிகுந்த உணவை உட்கொள்ளுதல் மூலமாகவும் நிலத்தின் சக்தியைப் பெறமுடியும்.

**நீர்**

நீர் சக்தி கிடைக்கவேண்டுமெனில் நீரில் வேம்பு அல்லது துளசி இலைகளை போட்டுக் கொள்ளலாம். செம்புப் பாத்திரத்தில் நீரை ஊற்றிவைத்தால் அதில் சக்தியும் வீரியமும் உண்டாகும்.

**காற்று**

காற்றின் சக்தி கிடைக்கவேண்டுமெனில் இயற்கைக் காற்று வீசும் இடங்களில் நடை பயிற்சி மேற்கொள்ள வேண்டும். மலைமீது உள்ள கோயில்களுக்கு செல்லலாம்.

**நெருப்பு**

சூரிய ஒளியில் நிற்பதும் யாகம் செய்து வழிபடுதலுமாகும். தினமும் சிறிது நேரம் சூரிய ஒளியில் நிற்க வேண்டும். கோபம், வெறுப்பு, பேராசை, பொறாமை போன்ற தீய குணங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாகம் செய்து வழிபடுதல் நலம் பயக்கும்.

**ஆகாயம்**

நிலம், நீர், காற்று, தீ போன்றவற்றை சரியாகப் பயன்படுத்தினாலே ஆகாய சக்தி நன்றாகக் கிடைத்துவிடும். இதன் மூலம் ஆழ்நிலை உறக்கமும், விழிப்புநிலையும் கிட்டும் இதனால் திருவருட்பேறு கிடைத்துவிடும். பஞ்சபூதங்களின் வழி வழிபாடு செய்வதால் இறைவனைத் தொடர்பு கொண்டு எண்ணங்கள் அற்ற விழிப்பு நிலைக்கு செல்லமுடியும். ஏதும் இல்லாத இருப்பு நிலை என்று சொல்லப்படுகின்ற ஆகாயம். வெட்டவெளி அதுவே சித்தநிலையாகும்.

**முடிவுரை**

மாணிக்கவாசகரின் நமசிவாய மந்திரத்தின் பொருளே பஞ்சபூத அம்சங்களாகும். ஐம்பூதங்களே இறைவனாகவும் எழுந்தருளிய நிலை வெளிப்படுகிறது. உலகம், உயிரினங்கள்,

உயிரினங்கள் குடியிருக்கும் பல்வேறு உடல்கள் என எல்லாவற்றிலும் நிறைந்திருப்பது பஞ்சபூத சக்தியேயாகும். ஐம்புலன்கள், நோய்களைத் தீர்க்கும் மருந்துகள், உடல் உறுப்புகள் போன்ற அனைத்திலுமே பஞ்ச பூதங்களின் தன்மை இருக்கிறது. மேலும் மாணிக்கவாசகருக்கு சிவபுராணத்தை அளித்த சிவபெருமானே நமசிவாய வாழ்க என்று முதலில் பஞ்சபூதங்களை வணங்கும் முறையை எடுத்துக் காட்டுகிறார். இதன் மூலம் பஞ்சபூத சக்தியை வணங்குதல் வேண்டும். பிறகு அப்பூதங்களோடு ஒத்திசைவாக செயல்படுதலும் வேண்டும். இதனால் இயற்கையைப் பேணிக் காப்பதன் அவசியத்தை உணரமுடிகிறது. மனித வாழ்வின் முழுமையானது பஞ்சபூதங்களைப் பயன்படுத்துவதிலும், வணங்குவதிலும், பேணிக் காப்பதிலும் முழு கவனம் செலுத்துவதில் இருக்கின்றது.

**குறிப்புகள்**

[1] அன்பழகன், கோ. *கடவுள் அறிவியல்.* இறையருள் மன்றம், ஊசூர், வேலூர், 2009
[2] ஆனந்தராசன், ஆ. *சிவஞானபோதம் வழித்துணை* (வி.உ), நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 17, 2011
[3] இராமையா, பு. ஏ. *செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி.* செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்க வெளியீடு, சென்னை 2004
[4] இராமநாதப் பிள்ளை, ப. *திருமந்திரம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் பதிப்பு – 1942.
[5] இராசமாணிக்கனார், வ. *சித்தர் இலக்கியம்.* தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், 2004.
[6] கந்தசாமிப்பிள்ளை, நீ. *திருவாசகம்* (மூலம்). அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல் வெளியீடு, 1964.
[7] சுந்தர மாணிக்க யோகீஸ்வரர், ஈ. (ப.ஆ). *ஔவைக் குறள்.* அழகு பதிப்பகம், ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை, 1915
[8] தெய்வசிகாமணிக் கவுண்டர், வே.ரா. (ப.ஆ). *அறிவனார் பஞ்சமரபு மூலமும் உரையும்.* ஈரோடு, 1975.
[9] தேவசேனாதிபதி, வ. ஆ. சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள். சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை, 1981.
[10] வானமாமலை, நா. ஏ. ஐ. ஓபாரின், (தமிழாக்கம்). *உயிரின் தோற்றம்.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை 98, 2008.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.